2017 ஜூலை 14]

209—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***16857—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். உதகமண்டலத்தில் உயர் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசிடம் தற்போது கருத்துரு ஏதுமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூரர் துறைமுகத்தை கல்விக் கண் திறந்த காமராஜர் பெயரிலிருந்து மாற்றக் கூடாது; தனியார் வசம் ஒப்படைக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்திரத் தன்மையோடு செயல்பட்டுவரும் எங்களது அருமை அண்ணன் தளபதி அவர்களுக்கும், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஐயா அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். காமராஜரைப் பற்றிய வரலாற்றை பெரிய அளவில் ஆராய்ச்சி செய்து, அவருடைய பெருமைகளை மாணவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் நமது பாடப் புத்தகத்தில் காமராஜர் பெயரைச் சேர்க்க வேண்டும். இதே கருத்தைத் தெரிவித்த மரியாதைக்குரிய ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. இன்பதுரை அவர்களுக்கும் இந்தத் தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில்நுட்ப வளர்ச்சியை ஏற்படுத்திய*

[2017 ஜுலை 14

அன்றைய யுக புரட்சி வேந்தன், மரியாதைக்குரிய ராஜீவ் காந்தி ஐயா அவர்களுடைய கனவு நனவாக வேண்டும். மாநில அரசினுடைய 290 ஏக்கர் நிலத்தில் அமைந்திருக்கிற H.P.F என்கிற Hindustan Photo Films நிறுவனம் மூடப்படுகிற தருணத்தில் இப்போது இருக்கிறது. அங்கு பணிபுரியும் கிட்டத்தட்ட 167 தொழிலாளர்கள் V.R.S. அளிக்க முன்வந்திருக்கிறார்கள். 307 ஏக்கர் நிலத்தில் 290 ஏக்கர் நிலம் மாநில அரசிடம் உள்ளது. கட்டமைப்புகள் அனைத்தும் அங்கே இருக்கின்றன. National Highways இருப்பதால், போக்குவரத்து வசதிகளும் அங்கே இருக்கின்றன. Access நன்றாக இருக்கிறது. Quarters வசதி இருக்கிறது, dams இருப்பதால், drinking water வசதி இருக்கிறது. அனைத்து கட்டமைப்புகளும் அங்கே இருப்பதால், நாம் மத்திய அரசிடம் அதை திரும்ப ஒப்படைக்கக் கூடாது. மரியாதைக்குரிய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள்மூலம் ஒரு Multi Speciality Hospital–ஐயோ அல்லது IT park–ஐயோ கொண்டுவந்தீர்கள் என்றால், மக்கள் நிச்சயமாகப் பயன்பெறுவார்கள். அந்த இடத்தை நீங்கள் திரும்ப ஒப்படைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், முதன் முதலில் கேள்வி கேட்கிறீர்கள். சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டத் தொடர் முடிவதற்கு இன்னும் 3 நாட்கள்தான் இருக்கின்றன. இன்றும் நான் கேள்வி கேட்கவில்லை என்றால் எனக்கு வாய்ப்பே கிடைக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மறுபடியும் கூட்டத்தொடர் தொடங்கும்போது மீண்டும் நீங்கள் இந்த அவைக்கு வந்து கேள்வி கேட்கலாம். ஒன்றும் அவசரப்படாதீர்கள். நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. இன்னும் 4 வருடங்கள் இருக்கின்றன. மானியக் கோரிக்கையில் பேசலாம். இன்றைக்கு கேள்வி மட்டும் கேளுங்கள்.

திரு. ஆர். கணேஷ்: ஆகவே, Multi Speciality Hospital, IT Park இரண்டும் ஒரே இடத்தில் இருந்தால் நிச்சயமாக நன்றாக இருக்கும் என்பதால், தயவுசெய்து அந்த இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். நீலகிரியில் தேயிலையினுடைய விலை வீழ்ச்சியினால் பொருளாதாரம் சீரழிந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேயிலையினுடைய விலை வீழ்ச்சியினைச்

2017 ஜூலை 14]

சரி செய்வதற்கு நல்ல ஒரு கருத்தினைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க சமுதாய தொழில் உட்கட்டமைப்புகளான மேம்படுத்தப்பட்ட சாலை, இரயில் மற்றும் விமானப் போக்குவரத்து வசதிகளோடு தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளான இணையதள வசதி, தொழில்நுட்ப திறமைவாய்ந்த தொழில்நுட்புநர்கள் போதுமான அளவில் கிடைப்பது, தடையில்லா மின்சாரம், மருத்துவம், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளும் இன்றியமையாததாகும். மேலும், உதகமண்டலத்திலிருந்து 80 கி.மீ. தொலைவிலுள்ள அண்டை மாவட்டமான கோயம்புத்தூரில் விளாங்குறிச்சி என்ற கிராமத்தில் 62 ஏக்கர் நிலப் பரப்பில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம்,* ELCOT, ELCOSEZ *எனப்படும் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றினை உருவாக்கியுள்ளது. இதன் நோக்கம் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் வளர்ந்த நாடுகளுக்கு இணையான அளவில் தொழில்நுட்பவியலை உருவாக்குவதோடு இத்துறையில் போதுமான அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்குவதும் ஆகும். கோயம்புத்தூர்* ELCOSEZ*–ல் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் ரூ.19 கோடி முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. 3,524 சதுர அடி கொண்ட ஒரு நிருவாகக் கட்டடம் ரூ.1 கோடியே 22 இலட்சம் முதலீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, 23–5–2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த* ELCOSEZ*–ல் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ.72.50 கோடி ஆகும். இந்த* ELCOSEZ*–ல் திருவாளர்கள் டைடல் பார்க், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திற்கு 9.5 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 17 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தகவல் தொழில்நுட்பக் கட்டடம் அமைக்கப்பட்டு, 11,000 பணியாளர்களுடன் இந்நிறுவனம் இயங்கி வருகின்றது. இதில் 9.14 இலட்சம் சதுர அடி தகவல் தொழில்நுட்பத்திற்காக*

ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது 8.39 இலட்சம் சதுர அடியில் 50 தகவல் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. மேலும், 952 இருக்கைகள் கொண்ட வளர்ச்சி மையம் 70,000 சதுர அடியில் 28 தகவல் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. Wipro நிறுவனத்திற்கு 9.5 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்நிறுவனம் 3.5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தகவல் தொழில்நுட்பக் கட்டடம் அமைத்து 2,000 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Multi–Speciality Hospital அமைக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள்தான் மிகச் சிறப்பான பதிலை அளிக்க வேண்டும். மேலும், உறுப்பினர் குறிப்பிட்ட அந்த இடம் தொழில் துறை வசம் இருப்பதனால், இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், சொல்லுங்கள்; கேள்வி கேட்க வேண்டுமா?

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 80,000 மலையாளம் பேசும் மக்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ளனர், தமிழகம் முழுவதும் எத்தனை இலட்சம் பேர் உள்ளனர் என்பது தெரியாது. அந்த 80,000 பேரில் 8,000 பேர் நீலகிரி மாவட்டத்தில் I.T. முடித்தவர்கள். அவர்கள் ஜாதி சான்றிதழ்கள் கேட்கிறார்கள். அதனைக் கொடுக்கிறார்கள், பின்னர் அதை வாங்கிக்கொள்கிறார்கள். இதனை நேற்று முன்தினம் உங்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். தயவுசெய்து தமிழகம் முழுக்க ஓர் அரசாணை பிறப்பித்து, அவர்களுக்கு B.C. Certificate–ஐக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோட்டாட்சியரைக் கேட்டால் கொடுக்கிறார்கள். 10 நாட்களுக்குப் பின்னர் அதனை invalid என்று சொல்லி, வீட்டிற்குத் திருப்பி

2017 ஜூலை 14]

அனுப்பிவிடுகிறார்கள். இப்பிரச்சினைக்கு தயவுசெய்து ஆவன செய்யுமாறு மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களைக் கேட்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

210—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***13828—திரு. கே.எஸ். விஜியகுமார்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், தேர்வாயிலுள்ள ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அம்மா ஓர் அதிசயப் பிறவி, அம்மாவின் பார்வை பட்டால் புல் கூட பூவாகின்றது. தகரம் கூட தங்கமாகிறது. மண்கூட பொன்னாகின்றது. என்னைப்போன்ற சாமானியர்கள்கூட சர்க்கார் மந்திரி ஆனார்கள். பனித் துளியைவிட பரிசுத்தமான தாயின் பாதத்தை வணங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்கி எனது பதிலை வழங்குகிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, தேர்வாயிலுள்ள அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். இந்த ஆண்டு தரம் உயர்த்துவதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள பள்ளிகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு நல்ல பதில் வர வாய்ப்புள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.